21.02.2024

அசல் வழக்கு எண்: 223/2017

வா.சா.1 சாட்சி அழகுமாரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

வாதி நிறுவனத்தின் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**23.01.1982 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

2 ம் பிரதிவாதி 6 ம் பிரதிவாதியிடம் கொடுத்த புகார் மனுவின் நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**புகார் மனுவின் நகல் வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

1967 முதல் 1986 ம் ஆண்டுவரையிலான வில்லங்க சான்றிதழை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**20.06.2017 ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

1987 ஆம் ஆண்டு முதல் 09.06.2017 ம் தேதி வரையிலான வில்லங்க சான்றிதழை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**10.06.2017 ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

செய்தி தாளின் பொது அறிவிப்பு வெளியிட்டதற்கான செய்தி தாளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**06.10.2017 ம் தேதியிட்ட தினதந்தி செய்தி தாள் வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக இந்த வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)